ஊர்கூடி தேரிழுப்போம்...

# நாங்கள்

அல்வாய் - மனோகரா

இதழ் 8

புரட்டாதி 1-30 2021

பிரதம ஆசிரியர்
க.பரணீதரன்
இணைஆசிரியர்கள்
வெ. துஷ்யந்தன்
செ. கணேசன்

அல்வாய் மனோகராக் கிராம ஆவணப்படுத்தல் மாதாந்த பத்திரிகை 30/-

எம்மவர்கள் அனைவருக்கும் வணக்கம்...

நாங்கள் 8 ஆவது இதழின் வாயிலாக எம்மவர்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. ஒவ்வொரு மாதமும் நாங்கள் பத்திரிகை எம்மவர்களிடையே ஏற்படுத்தும் தாக்கம் எம் அனைவருக்கும் மகிழ்வைத் தருகின்றது. எமது மகுட வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "ஊர் கூடி தேரிழுப்போம்" என்ற வாசகம் எம்மவர்களுக்கு மிகப் பொருத்தமாக இருப்பதையிட்டு பெருமையடைகின்றோம். "நாங்கள்" பத்திரிகை நம் அனைவரினதும் பத்திரிகை என்பதை மீளவும் நினைவுபடுத்திக் கொள்கின்றோம். இந்த இதழில் எமது ஊர் பிள்ளைகள் 19 பேர் உயர்தரத்திற்கு தெரிவாகியுள்ள செய்தியை பிரசுரித்து உள்ளோம். ஒரு வருடத்தில் 19 பிள்ளைகள் உயர்தரம் கற்க தகுதி பெற்றுள்ளமை ஒரு சாதனை என்று கூடச் சொல்லலாம்; நம் அனைவருக்கும் பெருமை சேர்க்கின்ற விடயமாக இது அமைந்துள்ளது. உயர்தரத்தில் சரியான பாடத் தெரிவு களை தெரிந்தெடுத்து தமது நிலையறிந்து கற்றால் நிச்சயமாக அனைவரும் பல்கலைக்கழகம் செல்ல முடியும். பிள்ளைகள் அனைவரும் 2 வருடங்கள் கல்விக்கு முதன்மை கொடுத்து தியாக மனப்பான்மையுடன் கற்றால் நிச்சயம் 19 பட்டதாரிகளை எமது ஊர் அறுவடை செய்து கொள்ளும். பெற்றோர்கள் தயவு செய்து கூடிய கவனம் எடுங்கள். இந்த பத்தொன்பது பிள்ளைகளில் யாருக்காவது எதாவது கல்வி சார்ந்த உதவி தேவைப்படின் எம்முடன் தொடர்பு கொள்ளலாம். எந்த உதவியையும் செய்ய நாங்கள் தாயாராகவுள்ளோம். மாணவர்கள் கல்வியே கண்ணாக இந்த இரண்டு வருடங்களும் இருந்து உங்கள் எதிர்கால வாழ்வை சிறப்பாக்க முயலுங்கள். எமது ஊருக்கு இந்த 19 பேரில் இருந்து வைத்தியர்கள், பொறியிலாளர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், அரச உத்தியோ கத்தர்கள் நிச்சயம் கிடைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. இந்த 19 பேருக்கும் சரியான வழிகாட்டலை பெற்றோரும் ஊரவரும் வழங்கி இவர்களை மேலும் சிறப்படைய வழி சமைப்போம். நான் முன்பு குறிப்பிட்டது போல, "கல்வியே எங்கள் மூலதனம்" என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

- க.பரணீதரன்

**ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு...**

**உள்ளே...**






1. ஆசிரிய பணியை உயிராய்க் கொண்ட குருமாமணி : அதிபர் வே.த.தனிகாசலம்

2. அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம்

3. 2020 சாதாரண தரப்பரீட்சையில் சித்தி பெற்று ஊருக்கு பெருமை சேர்த்த பிள்ளைகள் – படங்கள் – பெறுபேறு

4. தேசிய மட்டப்போட்டியில் பங்கு பற்றிய குறுந்தூர ஓட்ட வீரன் கதிரவேல் மங்களேஸ்வரன்

5. மறைந்தவர்கள் நினைவுகள்

6. உழைப்பால் உயர்ந்த சி.தங்கராசா

7. துறைசார் ஆசானாக பலரின் வாழ்வாதாரத்துக்கு வழிகாட்டியாக வாழ்ந்தவர் முருகேசு கிருஷ்ணபிள்ளை

8. விளையாட்டு ஆர்வத்தை பலரிற்கு தூண்டிய "சின்னவெட்டை"

9. அஞ்சலி
அமரர் திருமதி குலரத்தினம் செல்வமலர்
அமரர் திரு தம்பிமுத்து தர்மராசா
அமரர் தியாகராஜா மதனபாதம்

10.குறிச்சி – 5 – ஆராய்ச்சியாவளவு

11. அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் ஆரம்பகால உபயகாரர்கள்(13.01.1950 அறிக்கைப் பிரகாரம்)

12. மீள் பிரசுர நம்மவர் கவிதைகள்
வே.த.சண்முகவேல்
செல்வரூபி இரத்தினசிங்கம்
வெற்றிவேல் சிந்துஜன்
சாந்தமூர்த்தி கோகுலன்
சு.சுபாங்கன்
ஜெ.உமாசுதன்
வி.கிருசிகேசன்

13. மற்றும் பல....

தொடர்புகளுக்கு:
கலைஅகம்,
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் வீதி
அல்வாய்.
தொலைபேசி : 0775991949
email - jeevanathy@yahoo.com



# ஆசிரியப் பணியை உயிராய்க்கொண்ட குருமாமணி : அதிபர் வே.த.தணிகாசலம்

■ கலாநிதி த. கலாமணி ■

"உயிர் சேவைக்கு உடல் மண்ணுக்கு" என்ற உயர்ந்த இலட்சியத்தை வாழ்க்கை நோக்காகக் கொண்டு வாழ்ந்தவர் அமரர் அதிபர் வே.த.தணிகாசலம் அவர்கள். அல்வாய்க்கிராமத்தின் கல்விப் பாரம்பரியத்தின் மூலவரான ஆசான் வேலுச்சோதிடர் அவர்களின் பேரனான இவர், தமது பாட்டன் வழி நின்றும் தந்தையாரான ஆசான் க.வே.தம்பையாச் சோதிடர் வழிநின்றும் குருத்துவப் பணியையும் சைவப்பணியையும் ஆற்றி வந்தார்.

1928 இல் பிறந்த தணிகாசலம் அவர்கள் ஆரம்பக் கல்வியைத் தேவரையாளி சைவ வித்தியா சாலையில் பெற்றுக் கொண்டவர். பின்பு கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியிலும் நெல்லியடி மத்திய கல்லூரியிலும் தமது கல்வியைத் தொடர்ந்து, சிரேஷ்ட கல்வித் தராதரத்தைப் பெற்றுக் கொண்டார். குடும்பத்தில் மூத்த பிள்ளையாகப் பிறந்த காரணத்தினால் குடும்ப நிலைமையைக் கருத்தில் கொண்டு, உயர் கல்வியைத் தொடரும் எண்ணத்தை விடுத்து 1949 இல் ஆசிரியரானார். கம்பளையிலும் அதனைத் தொடர்ந்து பேராதனையிலும் ஆசிரியர் சேவை செய்த இவர், பலாலி அரசினர் ஆசிரியர் கலாசாலைக்குத் தெரிவாகி இரு வருட ஆசிரியப் பயிற்சியையும் பெற்றுக்கொண்டார். இப்பயிற்சிக் காலத்திலேயே பால பண்டிதர் பரீட்சையிலும் சித்தியடைந்தார். ஆசிரியர் பயிற்சியை முடித்துக்கொண்ட பின் புசல்லாவ திருத்துவக் கல்லூரிக்கு மாற்றம் பெற்றார். அங்கு தொடர்ச்சியாகப் பதினைந்து வருடங்கள் பணிபுரிந்தார்.

அதிபர் தணிகாசலம் அவர்கள் சவலை பிள்ளையம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியான இராஜேஸ்வரி அவர்களை திருமணம் செய்து இராஜேஸ்வரன், இராஜவரோதயன் ஆகிய இரு ஆண்பிள்ளைகளையும் தயாவதி. சத்தியவதி, உமா ஆகிய மூன்று பெண்பிள்ளைகளையும் மக்கட் செல்வங்களாகப் பெற்றார். இராஜவரோதயன், சத்தியவதி, உமா ஆகியோர் தற்போது வெளிநாடுகளில் வாழ்கின்றனர். கந்தாரணியம், சண்முகவேல், அருணாசலம், நவசக்தி, தங்கராஜா, ஏகாச்சரி ஆகியோர் அதிபர் தணிகாசலம் அவர்களின் உடன் பிறப்புகளாவர்.

அல்வாய்க்கிராமத்தின் முதலாவது ஆசிரியரான க.வேலுச்சோதிடர் அவர்களே அல்வாய்கிராமத்தின் கல்விப்பாரம்பரியத்தின் மூலவரும் முதலாம் தலைமுறையைச் சேர்ந்தவரும் ஆவார். வேலுச்சோதிடரின் மகனான தம்பையா சோதிடர் அவர்களே இரண்டாவது தலைமுறையில் அல்வாயில் ஆசிரியராக இருந்த ஒரே ஒருவராவார். தம்பையா சோதிடரின் மகனான தணிகாசலம் அவர்கள் ஆசிரிய பரம்பரையின் மூன்றாவது தலைமுறையினர் ஆவார். அல்வாய்க்கிராமத்தின் ஏனைய ஆசிரியர்கள் யாவரும் மூன்றாம் தலைமுறையிலும் அதன் பின்பும் வந்தவர்கள் ஆவர்.

சேவை மனப்பாங்குள்ள குருத்துவப் பரம்பரையில் வந்த ஆசிரியர் தணிகாசலம் அவர்களும் தமக்கென இலட்சியம் ஒன்றை வகுத்துக்கொண்டு, ஆசிரியப் பணியை இறைபணிக்கு ஒப்பானதாகக் கொண்டு, நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு வந்தார். ராஜாஜி, நேரு, அண்ணாத்துரை போன்ற தலைவர்களின் கருத்துகளாலும் காந்தீயக் கருத்துகளாலும் கவரப்பட்ட இவர், இலட்சிய வேட்கையுடன், "உயிர் சேவைக்கு உடல் மண்ணுக்கு" என உரைத்தும் எழுதியும் ஆசிரிய சேவை யாற்றி வரலானார். மலையகத்தில் இருபது ஆண்டுகளுக்கும் மேலாகப் பணி புரிந்தவேளை அம்மக்களின் ஏழ்மை நிலையும் வாழ்வுப் பிரச்சினைகளும் இவரது உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியமையால் வட பகுதிக்கு மாற்றம் கோராமல் நீண்ட காலம் அவர்களுக்காக உழைக்க வேண்டுமென உறுதி பூண்டார்.

மலையக மாணவரிடையே பாடபோதனையை மாத்திர மன்றி அறப்போதனையையும் மேற்கொண்டு அவர்களிடையே நல்ல வாழ்க்கை விழுமியங்களை வளர்க்கும் முயற்சிகளில் ஆசிரியர் தணிகாசலம் ஈடுபட்டார். புசல்லாவ திருத்துவக் கல்லூரியில் "இந்து இளைஞர் மன்றம்" என்ற அமைப்பை நிறுவி, கல்லூரியின் அருகிலமைந்திருந்த கதிரேசன் ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனை வழிபாட்டு முறையையும் ஆரம்பித்து



வைத்தார். தமது செயல்களாலும் பேச்சினாலும் மாணவர்களை நல்வழிப்படுத்திக் கொண்டிருந்த இவர் மாணவர்களதும் பெற்றோரதும் அன்புக்குரியவரானார். இவர் கற்பித்த மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் பிரகாசித்ததோடு, குருவிசுவாசம் மிக்கவராய் நீண்ட காலம் இவருடன் தொடர்புகளையும் வைத்துக் கொண்டிருந்தனர்.

புசல்லாவையிலிருந்து அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலைக்கு மாற்றம் பெற்று வந்த தணிகாசலம் அவர்கள் ஆசிரிய சேவையிலிருக்கும் போதே அப்பாடசாலையின் அதிபராகப் பதவி உயர்வு பெற்றார். பின்பு ஸ்ரீலங்கா பாடசாலையிலிருந்து கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் பாட சாலைக்கும் அதன் பின்பு அங்கிருந்து வல்வை சிவகுரு வித்தியாசாலைக்கும் இட மாற்றம் செய்யப்பட்டார். ஆனால், எப்பாடசாலையாயினும் அவர் அதிபராக இருந்த பாடசாலைகளின் வளர்ச்சிக்கென செய்திட்டங்களை வகுத்து அவற்றுக் கான நிதியுதவி பெற்று அவற்றை நிறைவேற்றவும் செய்தார்.

வே.த.தணிகாசலம் அவர்கள் இளைஞராக இருந்த போதே அறிவுத்தேடல் உடையவராக விளங்கினார். அந்நாளில் வெளிவந்த "ஈழகேசரி" பத்திரிகையின் அபிமான வாசகராக இருந்ததோடு, சிறுவர்களுக்கென பாடல்களையும் கட்டுரைகளையும் எழுதி வந்தார். இப்பாடல்கள் தனிநூலாக, வெளியிடப் பட வேண்டியவை. சில பாடல்கள் அவரின் மறைவின் பின்னர் அந்தியேட்டியின்போது வெளியிடப்பட்ட "வாழும் பெயர்" எனும் நூலில் இடம்பெற்றன. பாரதியின் கிளிக் கண்ணியை ஒத்ததாய், கல்வியின் சிறப்பை எடுத்துக் காட்டும் வகையில் தமது பாடலில்,

கல்வியில் மிஞ்சிய செல்வமொன்றுமில்லை
கற்றிட முன்வருவீர் – கிளியே
கற்றிட முன்வருவீர்

நல்லோராய் நாட்டினில் எல்லோரும் வாழ்ந்திட
நற்றுணை செய்யுமிது – கிளியே
நற்றுணை செய்யுமிது

என எழுதிச் செல்லும் அவர், "தோன்றாத்துணை" எனும் பாடலில்

"நெஞ்சம் கலங்குதம்மா – உலகினில்
நீதியும் மங்குதம்மா
வெஞ்சமர் செய்திடவே – குண்டுகள்
மேவியே தோன்றுதம்மா"

என்று யுத்தத்தின் கொடுமை குறித்து அச்சத்தை வெளிப் படுத்தியுள்ளார்.

அதிபர் தணிகாசலம் அவர்கள் சிறுவர் பாடல்களைப் பாடியதன் மூலம் சிறுவர் இலக்கியப் படைப்பாளியாக இனங் காணப்பட வேண்டியராவார். ஆனால் அவரின் பாடல்களும் கட்டுரைகளும் தனிநூலாக வெளிவந்திருப்பின், அவர் இலக்கிய





வரலாற்றில் இடம்பெற்றிருப்பார். இவர் பல இறை வணக்கப் பாடல்களையும் எழுதியவர். ஒரு சமயம், கதிர்காமம் செல்லும் பக்தர்களுக்காக கதிர்காமக்கந்தன் மீது தாம் பாடிய பாடல் களின் தொகுதியொன்றைத் தமது சொந்தச் செலவில் அச்சிட்டு வழங்கினார். அப்போது பாடசாலை மாணவனாக இருந்த எனக்கு இசையுடன் அப்பாடல்களை என் தந்தையார் சொல்லித் தந்தமை இப்போதும் ஞாபகமிருக்கின்றது. வல்வை சிவகுரு வித்தியாலத்தின் பாடசாலைக் கீதத்தை கூட அதிபர் தணிகாசலம் அவர்களே இயற்றியிருந்தார். சில வருடங்களுக்கு முன்னால் வல்வை சிவகுரு வித்தியாலயம் வெளியிட்ட சிறப்பு மலரில் இடம் பெற்றிருக்கும் பாடசாலைக் கீதத்தின் அடியில் "தணி" என்ற பெயர்க் குறிப்புக் காணப்படுகின்றது. ஆனால், அது அதிபர் தணிகாசலம் அவர்களையே குறிக்கின்றது என்பதைக் கூட இந்நாளைய அதிபர்கள் அறியாதிருக்கின்றனர்.

அதிபர் தணிகாசலம், அவர்கள் "அல்வை தணிகாசலம்", "விநோதன்", "இராஜநாயகன்", "தணி" போன்ற புனை பெயர்களில் அந்நாளில் எழுதி வந்தவர். அவர் அமரத்துவம் அடைந்த போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்த "ஈழகேசரி" இதழ்களில் காணப்பட்ட சிறுவர்க்கான பாடல்கள் சிலவற்றைத் தேடிக் கண்டறிந்து "வாழும் பெயர்" என்ற சிறுநூலை அவரின் குடும்பத்தார் வெளியிடுவதற்கு துணைநின்றேன்.

எனது சிறிய தந்தையாரான அதிபர் தணிகாசம் அவர்கள் எனது அம்மாவின் ஒன்றுவிட்ட சகோதரியையே மணம் முடித்திருந்தார். இதனால், பிள்ளைப் பராயத்திருந்து என்னை யும் என் சகோதரியையும் அரவணைத்து எங்களுக்கு புராண, இதிகாசக் கதைகளை எல்லாம் எளிமையாகச் சொல்லி மகிழ் வார். அவர் கதை சொல்லும் அழகே தனியழகாக இருக்கும். தொனி ஏற்ற இறக்கங்களுடன் குறித்த பாத்திரங்களாகத் தம்மை உரு வகித்து அக்கதைகளைச் சொன்னமையால் அவை நன்கு மனப்பதிவாகின. ஆசிரியப் பணியை அவர் செவ்வனே ஆற்றி மாணவர் மனங்களை கவர முடிந்தமைக்கு அவரது எடுத்துரைப்பு முறையே காரணம் என இந்நாளில் எண்ணிப் பார்க்கிறேன். சிறந்த வாசகரான அவர் அறிவுத் தேடல் உள்ளவராக விளங்கியமையால் அவரின் அறிவும் உலக அனுபவமும் விரிந்திருந்தன. பல்வேறு சஞ்சிகைகளை விலைகொடுத்து வாங்கிப் படித்து வந்தவர் அவர்.

"அறிவின் விரிவை அடிப்படையாகக் கொண்டு மாணவரை மையப்படுத்திய போதனையை மேற்கொள்வதே ஆசிரியத்துவம்" என்ற இந்நாள் விளக்கத்தை ஆசிரியர் தணிகாசலம் அவர்கள் அன்றே கொண்டிருந்தார். "கல்வியே கருந்தனம்", "பிச்சைபுகினும் கற்கை நன்றே" என்பன போன்ற முதுமொழிகளைத் தமது மாணவர்களுக்கு எடுத்தியம்பி கல்வியின்

மேன்மைக்காக உழைத்தவர் அவர். எனக்கு விஞ்ஞானப் பட்டப் படிப்புக்கு அனுமதி கிடைத்தவேளை, க.பொ.த உயர்தரத்துடன் ஆசிரியர் நியமனமும் எனக்குக் கிடைத்த போது, எனது குடும்ப நிலை காரணமாக பட்டப் படிப்பு மேற் கொள்வதை விடுத்து, ஆசிரியராகச் செல்வ தென நான் தீர்மானம் எடுத்திருந்தேன். ஆனால், என்னை வற்புறுத்தி பட்டப் படிப்பை மேற்கொள்ள வேண்டும் என என் தந்தையாரும் அதிபர் தணிகாசலம் அவர்களும் வற்புறுத்தினர். நான் கற்பித்தல் மீதும் இலக்கி யத்தின் மீதும் அதிக ஈடுபாடு கொள்வதற்கு எனது தந்தை யாரை அடுத்து முக்கியமான செல்வாக் கைச் செலுத்தியவர் எனது சிறிய தந்தை யாரான தணிகாசலம் அவர்களே என்பதை இன்றும் நான் நினைத்துப் பார்க்கின்றேன்.

அதிபர் தணிகாசலம் அவர் களின் குரல் கணீரென்று ஒலிக்கும் "ஒலி வாங்கி" இல்லாமல் உரப்பான குரலில் பேசக் கூடியவர் அவர். இதனால் "சிம்மக் குரலோன்" என்ற பட்டத்தைப் பெற்றவர். மலையகப் பாடசாலைகளில் தமது சேவையை முடித்துக்கொண்டு ஊருக்கு வந்த பின் வெள்ளி தோறும் கூட்டுப் பிரார்த்தனையை எமது ஆலடிப்பிள்ளை யார் ஆலயத்தில் முன்னெடுத்ததோடு, கூட்டுப்பிரார்த்தனை முடிவில், பிரசங்கங் களையும் மேற்கொண்டார். இந்நிகழ்வு களில் பல்வேறிடங்களிலுமுள்ள சமயப் பேச்சாளர்களை அழைத்து வந்தும் பிள்ளைகளில் நல்ல மனித விழுமியங் களை வளர்க்கப் பாடுபட்டார். எமது ஆலய பரிபாலன சபையின் தலைவராக இருந்து ஆலய புனருத்தாரண வேலைகளையும் மேற்கொண்டார்.

அதிபர் தணிகாசலம் அவர்கள் தமது சேவைக் காலத்திலேயே 1987 இல் அமரத்துவமடைந்தார். அவர் வாழும் போது மாணவர்களுக்கும் சமூகத்துக்கும் ஆற்றிய சேவைக்காக அவரின் சேவைக் காலத்திலேயே "அகில இலங்கைச் சமூக சேவா சங்கம்" அவருக்கு "குருமாமணி" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

அல்வாயின் மூத்த கல்விப் பரம்பரை வழிவந்து, அப்பரம்பரைச் சொத்தான சோதிடம், குருத்துவம் என்ப வற்றின் பெருமையைப் பேணிக்காத்து, "உயிர் சேவைக்கு உடல் மண்ணுக்கு" என்ற தாரக மந்திரத்துடன் எளிமை யாகவும் நேர்மையாகவும் சைவ வாழ்வு வாழ்ந்து வந்த அமரர் தணிகாசலம் அவர்கள் வரலாற்றில் வாழ்பவராவார்.

●

# அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம்

அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் 2021.09.26 மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மிகச்சிறப்பாக 10 நாள் உற்சவமும் நடைபெற்று 11 ஆம் நாள் பூங்காவனமும், 12 ஆம் நாள் வைரவர் சாந்தியும் நடைபெற்று நிறைவுற்றுள்ளது. கொவிட் – 19 கொரோனாத் தொற்றுக் காரணமாக சுகாதார நடைமுறைகளை அனுசரித்து வழமையாக இரவு உற்சவமாக நடைபெறும் திருவிழா மாறாக அதிகாலை 3.30 மணி தொடக்கம் 6.30 மணிக்கு இடையில் நடாத்தப்பட்டது. ஊர்மக்கள் அனைவரும் ஒத்துழைத்து இத்திருவிழாவை சிறப்புற நடாத்தி முடித்துள்ளார்கள். கொடியேற்ற முதல் நாள் வசந்த மண்டபத்திற்கு முன்பாக சுமார் ஒரு மணி நேரமாக வெள்ளை நாகம் காட்சி கொடுத்து பக்தர்களுக்கு அருள் வழங்கியது. வருடாந்தம் நடைபெறுகின்ற சைவ பிரசங்கங்கள், வினாடி வினா போட்டி, சிறப்பு நிகழ்ச்சிகள் கொவிட் – 19 காரணமாக நடைபெறவில்லை. அடியார்கள் அனைவரினதும் கூட்டிணைவுடன் மிகச்சிறப்பாக உற்சவம் நடாத்தப்பட்டது. திருவிழாவை முன்னிட்டு வெளியிடப்படும் ஆன்மிக சஞ்சிகையான "காத்தவராயர் மான்மியம்" வெளியானது. இந்த வருட திருவிழாவை முன்னிட்டு கோயிலுக்கு முன்னுள்ள மதில் கட்டப்பட்டதுடன் அன்னதான சமையல் கூடமும், நிருத்திகன் சிறுவர் பூங்காவுக்கான கட்டடமும் கட்டப்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

**- க.பரணீதரன்**














# 2020 சாதாரணதரப் பரீட்சையில் சித்தி பெற்று ஊருக்கு பெருமை சேர்த்த எமது பிள்ளைகள்


கஜந்தினி கமலநாதன்
3C4S


ஜீவாகரன் வேணுசன்
2B3C4S


கம்ஸத்வனி ஆதவன்
7A2B


அகல்விழி அசோகலிங்கம்
9A


பாலசுப்பிரமணியம் தனுசுயன்
A4C4S


மகிந்தன் தட்சயன்
AB7C


தாரணா திருஞானசேகரன்
8AB


தரங்கணி தர்மதேவன்
9A


உதயரத்தினம் சுஜீவராஜ்
2B2C3S


அட்சயா சிவனேஸ்வரன்
2A2B3CS


மோகன் வர்ஷன்
9A


தக்சிதா வித்தியாபதி
9A


செல்வேஸ்வரன் சன்ஜீத்
4C2S


நிந்து செல்வராஜா
2A3Bc2S


விஷ்ணுகா இரத்தினவேல்
9A


பிரதிக்ஷா பிரபானந்தன்
A2B4CS


நிதுஷா சந்திரராசா
2A2B4CS



பாக்கியநாதன் பிரபாஜிதன்
4A2B3C


ஜதீசா சுதாகரன்
9A

ஒரு வருடத்தில் 19 மாணவர்கள் உயர்தரத்திற்கு தகுதி பெற்றுள்ளமை எமது ஊரவர்கள் அனைவரும் பெருமை கொள்ளக் கூடிய விடயம் அனைத்து மாணவர்களுக்கும் பாராட்டுக்கள்.


# தேசிய மட்டப்போட்டியில் பங்கு பற்றிய குறுந்தூர ஓட்ட வீரன் கதிரவேல் மங்களேஸ்வரன்

■ கணபதிப்பிள்ளை வரதவேல்



அல்வாய் மனோகராக் கிராமத்தின் கொக்கட்டியாவளவு கல்வி, கலை, கலாசாரம், விளையாட்டு ஆகிய விழுமியங்கள் ஒருங்கே அமைந்த சிறப்பு வாய்ந்த குறிச்சியாகும். அதிபர்கள், பேராசிரியர், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், அரசசேவையாளர்கள், பல்கலைக்கழக பட்டதாரிகள் என பல்வகை ஆளுமைகளைக் கொண்ட குறிச்சியாகும். அல்வாய் ஆராச்சியாவளவு கதிரவேல் அவர்களுக்கும், கொக்கட்டியாவளவு பொன்னம்மா அவர்களுக்கும் இடையிலான திருமண பந்தத்தினூடாக 24.11.1946 இல் சிரேஷ்ட புதல்வனாக மங்களேஸ்வரன் பிறந்தார். இவரது தந்தை கதிரவேல் அவர்களோடு உடன் பிறந்தவர்கள் அமரர்கள் அப்பையா, திருமதி கந்தையா நாகமுத்து, பஞ்சாட்சரம் (மதுரை), திருமதி நவரத்தினம் ஜானகி அம்மா மற்றும் தங்கராசா (கவிதா நிதி) ஆகியோர்கள். இவரது தாய் பொன்னம்மா அவர்களோடு உடன்பிறந்தவர்கள் அமரர்கள் கந்தவனம், திருமதி வல்லிபுரம் மீனாட்சியம்மா. இவரது உடன் பிறப்புகள் திருமதி பாக்கியராசா மீனாட்சியம்மா, திருமதி இராசரத்தினம் கமலகுமாரி, அமரர் விஜயகுமாரி, ஜெயராணி, அகிலேஸ் வரன், சர்வேஸ்வரன் (திரவியம்) ஆகியோர்கள்.

இவர் யா/தேவரையாளி இந்துக் கல்லூரி மற்றும் யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்றதோடு விஞ்ஞானப்பிரிவைத் தெரிவு செய்து ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்றதை குறிப்பிட்டுச் சொல்லலாம். பாடசாலையில் கல்வி கற்றகாலங்களில் கல்வியோடு மட்டுமல்லாமல் விளையாட்டுத்துறையிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். 100 யார், 220 யார், 440 யார் குறுந்தூர ஓட்டங்களிலும், நீளம் பாய்தல், உயரம் பாய்தல் கள விளையாட்டுக்களிலும் பாடசாலை இல்ல மெய்வல்லுனர் போட்டிகளிலும், பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றிச் சான்றிதழ்களைப் பெற்றதோடு சிறந்த மெய் வல்லுனராகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இவர் தேவரையாளி இந்துக்கல்லூரியிலிருந்து தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டிகளில் பங்குபற்றியமை விளையாட்டுத் துறையில் இவருக்குக் கிடைத்த ஒரு மைல் கல்லாகும். எமது கிராத்திலிருந்து தேசியமட்ட மெய்வல்லுனர் போட்டியில் பங்கு பற்றிய முதல் வீரரும் இவர்தான். 1962ம் ஆண்டு 09 நாட்கள் கொழும்பு கோட்டை கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற அகில இலங்கை மெய்வல்லுனர் பயிற்சிப் பட்டறைக்கு தேவரையாளி இந்துக்கல்லூரியிலிருந்து தெரிவாகி பங்கு பற்றியமை இவருக்கு கிடைத்த ஓர் வரப்பிரசாதமாகும். இவர் கொழும்பு, அவிசாவளை, கண்டி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு சென்று போட்டிகளில் பங்கு பற்றியிருந்தார். மெய்வல்லுனர் போட்டிகளோடு பாடசாலை உதைபந்தாட்ட அணியிலும் இடம் பிடித்து மிகவும் நுட்பமானமுறையில் உதைபந்தாட்டத்தை விளையாடக் கூடிய ஆற்றலைக் கொண்டிருந்தார். தேவரையாளி இந்துக்கல்லூரியில் விளையாட்டுப் பொறுப்பாசிரியராக இருந்த அமரர் தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கம் ஆசிரியர் அவர்களை தனது விளையாட்டுத்துறையின் குருவாக இன்றும் மனதில் நிலை நிறுத்துவதோடு, அதிபர் அமரர் மூ.சி.சீனித்தம்பி அவர்கள் தன்னை ஊக்கப்படுத்தியதை நினைவில் கொள்கின்றார். இவர் உதைபந்தாட்டம் மற்றும் மெய்வல்லுனர் போட்டிகளில் பெற்றுக் கொண்ட வெற்றிச் சான்றிதழ்களை இன்றுவரை பேணிப்பாதுகாத்து வருகின்றார். எமதூரில் முதன் முறையாக ஆணிச்சப்பாத்து (ஸ்பைஸ்) அணிந்து மெய்வல்லுனர் போட்டியில் பங்கு பற்றிய பெருமையும் இவரையே சாரும். அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தின் ஆரம்பகால உதைபந்தாட்ட அணியில் மிகவும் வயது குறைந்த வீரராக விளையாடியிருந்தார். அவ்வணி பல வெற்றிகளை பெற்ற போது இவர் விளையாடியமை குறிப்பிடத்தக்கதாகும். இவர் மனோகரா விளையாட்டுக்கழகம் மாத்திரமல்லாமல் அயற் கிராமங்களில் உள்ள பல கழகங்களின் உதைபந்தாட்ட அணிகளில் விளையாடியமை இவர் அத்துறையில் சிறந்து விளங்கியமைக்கான ஓர் எடுத்துக் காட்டாகும். 1971ம் ஆண்டு அல்வாய் மந்தடியைச் சேர்ந்த பொன்னையா பொன்னம்மா தம்பதியினரின் இளைய



CHRISTIAN COLLEGE, KOTTE

All-Island Athletic Coaching Camp, 1962,
Sponsored by the Ceylon Daily News

This is to certify that K. MANGALESWARAN.
of THEVERAIYALI HINDU COLLEGE, KARAVEDDI.
attended the 6th All-Island Athletic Coaching Camp
from 17th - 25th August 1962


Director President



ALVAI MANOHARA SPORTS CLUB
ANNUAL ATHLETIC MEET
1974

This is to certify that K. Mangaleshwaran
of Alvai Manohara Sports Club was placed
First in 400 Metres under years
at the above meet.
Achievement

President Joint Secretaries Prefect of Games



ALVAI MANOHARA SPORTS CLUB

ANNUAL FOOTBALL TOURNAMENT
1966
Chief Guest:
A. C. Visvanathan Esqr.

This is to Certify that Mr. K. Mangaleswaran the best player of 'Flash' Team.

V.T. Thanigasalam
President Chief Guest Joint Secretaries

மகளான சிவமலர் அவர்களை தனது இல்லற வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொண்டு விஜயபாரதி, தெய்வீகன், திலீபன், இந்திரன் (அமரர்) ஆகிய நான்கு மக்கட் செல்வங்களை பெற்றெடுத்தனர். விஸ்ணுயா, விஸ்ணுதரன், விஷாலினி, விதுர்ஸ்மன், விஸ்மிதன், விஸ்மிதா, விஸ்ணுஜன், விருஷான், விபிஷா, விந்துஜா, வினுஸ்ரா ஆகிய பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்வாக இருக்கின்றனர். இவரைப் போலவே இவரது புத்திரர்கள் தெய்வீகன், திலீபன் ஆகியோர்களும் உதை பந்தாட்டம், துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம் ஆகிய துறைகளில் ஈடுபாடுடையவர்களாக இருந்து வருகின்றார்கள். இவரது மூத்த புதல்வனாகிய தெய்வீகன் மனோகரா உதைபந்தாட்ட அணியின் சிறந்த வீரராக இருந்து பல உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் விளையாடி வெற்றிக் கிண்ணங்கள் பெறுவதற்கு மிகவும் காத்திரமான வகிபாகத்தினைக் கொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

திரு.கதிரவேல் மங்களேஸ்வரன் அவர்கள் நல்லதொரு வசீகரமான குரல்வளம் கொண்ட பாடகர். இவருடைய பாடல்களை அன்றைய காலங்களில் அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலய மஹாசிவராத்திரி நாடக விழாக்களின் போது பக்கவாத்தியக் கலைஞர் களான அமரர் மு.பொன்னையா (ஹார்மோனியம்), திரு.செ.செல்வராசா(மிருதங்கம்) ஆகி யோர்களின் இசையில் சிவராத்திரி அரங்கில் பக்திப்பாடல்கள், சினிமாப்பாடல்கள் என்பவற்றைப் பாடி மக்களை மகிழ்வித்திருந் தார். இதனால் இரசிகர்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றிருந் தார். இவருக்கு மிகவும் விருப்பமான பாடல்கள் அலைபாயுதே கண்ணா, ஜெகஜனனே, நான் பெற்ற செல்வம் ஆகியவை, புரட்சிப் பாடல் களையும் விரும்பிப் பாடுவார். இப்படிப் பல ஆளுமை களைத் தன்னகத்தே கொண்டுள்ள திரு.கதிரவேல் மங்களேஸ் வரன் அவர்கள் பற்றிய பதிவு களை நாங்கள் மாதாந்தப் பத்திரிகை யினூடாக வெளிக் கொணர்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். ●

## மறைந்தவர் நினைவுகள்

**முருகர் நவரத்தினம், ஒஸ்தா சின்னத்துரை, எரம்பு முருகேசு**

இவர்கள் மூவரும் நாடகம் நடிகின்றார்கள் என்றால் சிறுவர்களாகிய எமக்கு நித்திரை கூட மறந்து போகும். வயிறு குலுங்க வைக்கும் அந்தக்காலத்து நாகேஷ், சந்திரபாபு, சுருளிராஜன் போன்றவர் களை நினைவுபடுத்தும். ஏரம்பு முருகேசு வெள்ளைக்காரத்துரை எவ்வாறு ஆங்கிலத்தில் உரையாடுவார் என்று ஒஸ்தாருடன் உரையாடும் வேளை ஒஸ்தார் அதற்கு ஏற்றது போல் மறுமொழி கூறுவார். இவர்கள் தமது பாணியில் நடித்துக் கொண்டிருக்கும் போது நவரத்தினம் வருகை தந்தால் குழப்பம் தான். பார்வையாளர்களுக்கு கொண்டாட்டம் தான். அந்த குழப்பம் நகைச்சுவையாக மாறி பார்வையாளர்கள் வயிறு குலுங்க குலுங்க சிரித்து சிரித்து இன்புறுவர்.

ஒரு நாடகத்தில் ஒஸ்தார் "வெளிநாட்டில் எம்மவர் படும் பாடு" என்ற நாடகத்தில் சலூன் ஒன்றில் கடமை புரிபவராக நடித்தார். அந்த சலூனுக்கு ஒருவர் சவரம் செய்ய செல்கின்றார். அவருக்கு சோப்புக்கு பதிலாக கோதுமை மா கலவையை முகத்தில் பூசுகின்றார். சவரம் செய்வதற்கு அரிவாளை எடுக்கிறார். இதனை அவதானித்த, வந்த வாடிக்கையாளர் தலைதெறிக்க ஓட்டம் எடுத்தார். இவர் துரத்திக் கொண்டு பின்னால் ஓடுவதாக காட்சி அமைந்தது.

சிறுவர்களாகிய எமது பரிசளிப்பு விழா நிகழ்வு ஒன்றில் ஏரம்பு முருகேசு அவர்கள் தலைமையேற்று குப்பையடி மைதானத்தில் ஆங்கிலப் பேச்சு ஒன்றை பேசுவதாக குறிப்பிடப்பட்டது. அதைக்கேட்க நாம் அனைவரும் கூடியிருந்த சமயம் திரு நவரத்தினம் அவர்கள் வந்தார். அவரைக் கண்டதும் இவர் தனது உரையை நிகழ்த்தினார். நவரத்தினம், "சேர் எந்த நாடு?" என்றதும், "சவுத் ஆபிரிக்கா. எம் கன்றி வெறி வெறி நைஸ்" என்றதும் நவரத்தினம் அடே முருகேசு என்னமா புளுகிறான் வாடா சின்னத்துரை என்றதும் பரிசில்கள் வழங்கியதை கூட இடை நிறுத்தி ஒரே ஓட்டமாக அங்கிருந்து சென்று விட்டார் ஏரம்பு.

முருகர் நவரத்தினம் ஒரு சிறந்த நகைச்சுவை நடிகர். வருடா வருடம் எமது ஆலடியான் முன்னிலையில் நடைபெறும் சிவராத்திரி விழாவில் பூதத்தம்பி நாடகத்தில் சின்னலாந்தேசுவாக நடித்தார். நாடகம் பார்த்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு ஊடாக மேடைக்கு செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. அவ்வேளை திரு நவரத்தினம் அவர்கள் குதிரைச்சவாரியில் மக்களை இடித்துத் தள்ளுமாப்போல் சென்றதை எம் கண் முன்னே காணக்கூடியதாக இருந்தது.

- இரா. இரத்தினவேல்



திரு திருமதி விஜயராசா கனகரத்தினம் தம்பதியினரின் புத்திரன் விஜிதன் அவர்களும், கம்பர்மலையை சேர்ந்த கனடா மொன்றியலில் வசிக்கும் திரு திருமதி இராசதுரை தம்பதியினரின் புத்திரி கலையரசி அவர்களும் 01.09.2021 அன்று திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார்கள்.



திரு திருமதி தவராசா கமலலோஜினி .தம்பதியினரின் புத்திரன் சிந்துஜன் அவர்களும், திரு திருமதி செல்வரத்தினம் சந்திரோதயம் தம்பதியினரின் புத்திரி பிரியந்தி அவர்களும் 11.09.2021 அன்று திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார்கள்.



# உழைப்பால் உயர்ந்த சி.தங்கராசா

■ செல்லக்குட்டி கணேசன்

எமது கிராமத்தின் சீவல் தொழிலாளர் வரலாற்றை பதிவு செய்யும் போது ஒரு காலத்தில் (1960 - 2014) தவிர்க்கப்பட முடியாத ஒருவராக நினைத்துப் பார்க்கப்பட வேண்டியவர் ஆராய்ச்சியாவளவு (கவிதாநிதி) சி.தங்கராசா அவர்கள். இவர் ஆராய்ச்சியா வளவில் வாழ்ந்து வந்தவர்களான அமரர்கள் திரு.திருமதி.சின்னத்தம்பி பூரணம் தம்பதிகளின் இளைய மகன் ஆவார். 07.05.1943 இல் பிறந்த இவர் வாய்பேச (ஊமைஅல்ல) முடியாத குழந்தையாக விளங்கினார். இதனால் உள உடல் தாக்கத்திற்கு உள்ளான பெற்றோர் பல முயற்சிகள் செய்தும் அவரால் ஒரு வார்த்தை கூட உச்சரிக்க முடியவில்லை. இந்நிலையில் வதிரி கோவியர் பகுதிக்கு தொழில் நிமிர்த்தம் நாளாந்தம் சென்று வரும் இவரது தந்தையார் அப்பகுதியில் உள்ள மாணிக்கப் பிள்ளையார் மீது மெய்வருந்தி, நேர்த்தி வைத்து வழிபட்டு வந்தார். இதன் பயனாக தங்கராசா என்ற குழந்தை கதைக்க ஆரம்பித்தார். இதனால் மகிழ்வுற்ற இவரது பெற்றோர் இவருக்கு மாணிக்க வாசகர் என்ற இன்னொரு நாமத்தையும் சூட்டி மகிழ்ந்தனர். அழைத்தனர். இவருக்கு கதிரவேல் (கொக்கட்டியாவளவு), நாகமுத்து (அரசரட்ணம் அவர்களின் தாயார்), பஞ்சாட்சரம் (மதுரை, அ.வடக்கு வயல் குறிச்சி) ஜானகி அம்மமா (கேவோலை) ஆகியோர் உடன் பிறப்புகளாவர்.

சி.தங்கராசா - இவரை "வெள்ளையன்" என்று ஊரவர்கள் அழைப்பதுண்டு. இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/தேவரையாளி இந்துக் கல்லூரியில் கற்றார். நான்காம் வகுப்புடன் பாடசாலைக் கல்வியை இடை நிறுத்திக் கொண்ட இவர் சிறு பராயத்திலேயே கள் விற்பனைத் தொழிலில் தன்னை இணைத்துக் கொண்டார். (அது மரவரிக் காலம்) இவரின் கெட்டித்தனத்தை அவதானித்த அல்வாய் வடக்கு பூம்புகார் கதிரவேல் அவர்கள் எவ்வளவு காலம் இவ்வாறு கள்ளு விற்கப் போகிறாய். வா, நான் தொழிலை கற்றுத் தருகிறேன் என்று இவரது பதினைந்தாவது (15) வயதில் சீவல் தொழிலைக் கற்றுக் கொடுத்தார். அண்மையில் "நாங்கள்" பத்திரிகைக்காக அவரை அவரது இல்லத்தில் சந்திக்க நேர்ந்த போது "பூம்புகார் கதிரவேல் அண்ணன் எனது தொழில் குரு மட்டுல்ல, நான் இன்று இந்த நிலைக்கு உயர, மனிதனாக நடமாட அவரிடமிருந்து நேரடியாகவும் மறை முகமாகவும் கற்றுக் கொண்ட நல்ல பண்புகளுமே காரணம்" என கண்கலங்க எடுத்துரைத்தார்.

தொழிலில் மிக அவதானத்துடன் செயற்பட்டு வந்த இவர் 1962ம் ஆண்டு கேவோலை குறிச்சியில் வாழ்ந்து வந்தவர்களான திரு.திருமதி.மயிலு சிவபாக்கியம் தம்பதிகளின் புதல்வி அருந்ததி அம்மாவை பெற்றோரினதும் பெரியோர்களின் விருப்பப்படி திருமணம் செய்து கொண்டார். இவர்களின் இல்லற வாழ்வின் பயனாக ஆறு குழந்தைகளைப் பெற்றெடுத்தனர். அவர்கள் முறையே ரதிராசா ஸ்ரீ (குழந்தை மரணம்), கவிதா, நிதிகரன், தங்கநிதி, ரங்கநிதி, பவிதா ஆகியோராவர்.

இவரது கடின உழைப்பும் மனைவியின் சிக்கனமான வாழ்வு முறையும் "வன்னியஞ்சீமா" நிலப்பரப்புகளில் பெரும்பாலானவற்றை கொள்வனவு செய்ய உதவியதோடு, 1968ம் ஆண்டு "கவிதா நிதி" என்ற கல்லாலான வீட்டையும் கட்டி கிரகப் பிரவேசம் செய்து இன்றுவரை அவ் வீட்டில் மனைவி மக்கள் பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகளுடன் மகிழ்வாக வாழ்ந்து வருகிறார்.

அவருடனான உரையாடலின் இடையே "அப்பு (நான் அவ்வாறு தான் அவரை வாஞ்சையுடன் அழைப்பேன்) எமது கிராமத்திலேயே முதன் முதலில் குழாய்க் கிணறு வெட்டியது நீங்கள் தான் என்பதை நான் அறிவேன். எவ்வாறு இவ்வாறான ஒரு எண்ணம் (சிந்தனை) உங்களுக்கு தோன்றியது என்று சொல்ல முடியுமா?" என்று கேட்ட போது கண்கலங்கிய படியே சொன்னார். அவற்றைக் கேட்டு நானும் கொஞ்சம் நிலைகுலைந்து போனேன். சற்று நேரத்தில் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு சொன்னார் "தம்பி நான் தொழில் செய்யத் தொடங்கிய காலம் முழுவதும், வதிரி, வதிரிச்சந்தி பகுதியிலேயே தொழில் செய்து வந்தேன். அப்போது அச் சூழலில் வாழ்ந்து வந்தவர்கள் அனைவரும் என்னுடன் மிக அன்பாக பழகினார்கள். எனக்கும் அவர்களுக்கும் இடையேயான நட்பின் காரணமாக, அவர்கள் வீடுகளுக்கு தொழில் நிமிர்த்தமும் நட்பின் பேரிலும் சென்று வருவேன். அவ்வாறு சென்று வரும் போது







கோரிக்கியாவளவு தவராசா என்பவர் தனது மனைவியின் வீட்டில் இடித்த குழாய்க் கிணற்றைப் பார்வையிட்டதும் இவ்வாறான ஒரு குழாய்க் கிணற்றை நான் எனது வீட்டில் இடிக்க வேண்டும் என்ற சிந்தனை என் மனதில் எழுந்தது. தவராசாவுடன் (கோரிக்கியாவளவு தவம்) தொடர்பு கொண்டேன். தானே கிணற்றை இடித்துத் தருவதாக சொன்னார். அவர்களது கிணறு ஆழம் குறைவானதால் நிலத்தில் இருந்து குழி இறக்கி மோட்டர் வைத்து நீர் எடுத்தார்கள். நாங்கள் அவ்வாறு செய்ய முடியாது.எனவே 25 அடி ஆழமும் 8" அகலம் கொண்ட குழி வெட்டி, பின்னர் அதனுள் மனித வலுவை பிரயோகித்து குழாய்க் கிணறை இடித்தோம். இக் குழியை நானும் என்னுடன் தொழில் செய்து வந்த அல்வாய் வடக்கு வயல் குறிச்சியைச் சேர்ந்த செல்வமாணிக்கம் அவர்களின் சகோதரன் சின்னத்துரையுமே சேரந்து வெட்டினோம். நீர் (தண்ணீர்) வந்தவுடன் மகிழ்ச்சியில் என்ன செய்வது என்று தெரியாமல் தவராசாவுடன் ஆலோசித்த போது இன்றைக்கே ஆடு ஒன்று வெட்டி பலி கொடுத்து பொங்கல் செய்ய வேண்டும். உடனே மோட்டர் மற்றும் அவற்றிற்குரிய சாமான்களையும் வாங்கி வாருங்கள் என்றான். உடனடியாக உல்லியவத்தை கிருஷ்ணபிள்ளை அவர்களுடைய காரைப் பிடித்து யாழ்ப்பாணம் சென்று தேவையான பொருட்கள் அனைத்தையும் கொள்வனவு செய்து வந்தோம். அப்படியிருந்தும் ஒரு சிக்கல் இருந்தது. எங்களுடைய வீட்டிற்கு மின்சார வசதியில்லை. 1978ம் ஆண்டு மின்சாரம் ஊருக்கு வந்தாலும் அதனைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதம் உடனே மயிலிட்டி வீரகத்தி (நகுலேஸ்வரியின் கணவர்) அவர்களின் லைற் மிசின் இஞ்சினைப் பயன்படுத்தி மோட்டரை இயக்கி நீர் எடுத்து அன்றே பொங்கல் வைத்து பலிகொடுத்தோம். இதன் பின்னர் கல் அறுத்து குழியை கட்டினோம். அதன் பின்னர் மின்சார இணைப்பு கிடைத்தது. நீரை வெளியே எடுத்து நிரப்புவதற்காக பெரியளவிலான தொட்டியை கட்டினோம்.

ஏற்கனவே வதிரிச் சூழலில் எனது ஊடாட்டம் இருந்ததனால் அவர்களின் நிலங்களை குத்தகைக்கு எடுத்து வெங்காயம், புகையிலை செய்கைகளில் ஈடுபட்டு வந்த அனுபவம் குழாய் நீர் வசதி வந்ததும் எங்கள் நிலப்பரப்பில் முதலில் வெங்காயம் பயிரிட்டேன். அது நல்ல பயனைத் தந்தது. பின்னர் புகையிலை செய்கையில் ஈடுபட்டேன். அச் செய்கையும் எனக்கு நல்ல பயனைத் தந்தது. எமது கிராமத்தில் முதன் முதலில் புகையிலைச் செய்கையை மேற் கொண்டு திருப்தி கண்டேன்.

இவ்வாறு தனது அனுபவத்தை கூறிய தங்கராசா கிளிநொச்சி மூன்று ஏக்கர் விவசாய நிலத்தை கொள்வனவு செய்து அங்கும் தனது விவசாய முயற்சியை விருத்தி செய்ததாகச் சொன்னார். ●

## அஞ்சலி

**அமரர் தம்பிமுத்து தர்மராசா**

**(06.12.1943 - 07.09.2021)**



சரஸ்வதி பவனம் புதுத்தோட்டம் நெல்லியடி கிழக்கை பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்தவருமான தம்பிமுத்து தர்மராசா அவர்கள் எமது ஊருக்கும் உரித்துடையவர். தம்பி முத்து அன்னப்பிள்ளைக்கு மூத்தமகனாக பிறந்த தர்மராசா அவர்கள் சிறுபிள்ளையில் இருந்தே அனைவருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் இயல்பை உடையவராக விளங்கினார். வரதராசா(கனடா), சரஸ்வதியம்மா கிருஷ்ணா, காலஞ்சென்றவர்களான வசந்தராசா, யோகநாதன், துரைராசா ஆகியோரை சகோதரங்களாக கிடைக்கப் பெற்றார். பால பரமேஸ்வரி அவர்களை கரம் பிடித்து இன்புடன் வாழ்ந்து வந்த தர்மராசாவிற்கு ரவீந்திரராஜா, கவிதா, நிரஞ்சலா, அன்னராணி, நிவேதிகா என ஐந்து பிள்ளைகள் கிடைக்கப்பெற்றனர். பிள்ளை களுடன் மிகவும் பாசமுள்ளவராகவும் பிள்ளைகளை சிறப்பாக வளர்த்தெடுக்க பாடு பட்டு உழைத்து பிள்ளைகள் அனைவரையும் சீரும் சிறப்புமாக வாழ வழி சமைத்தார்.

இலங்கையில் இருந்து கனடாவிற்கு புலம் பெயர்ந்து தன் பிள்ளைகளுடன் அங்கு மகிழ்ச்சியான வாழ்வை வாழ்ந்து வந்தார்.

ஆரபி, ஹரினி. பிரவீனன், நிரோசன். வருண். வர்ஷா, அஸ்வின், அப்சரா, அர்வின் ஆகிய பேரப்பிள்ளைகளை தன் அன்பால் ஈர்த்து அவர்களின் அன்புக்குரிய தாத்தாவாக வாழ்ந்து வந்தார். ஊரிலும் புலம் பெயர்ந்த தேசத்திலும் உறவுகளுடன் நேசத்துடன் பழகி வந்த அன்னார் இயற்கையின் மூப்பு காரணமாக 07.09.2021 இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- பரணீ

# துறைசார் ஆசானாக பலரின் வாழ்வாதாரத்துக்கு வழிகாட்டியாக வாழ்ந்தவர் முருகேசு கிருஸ்ணபிள்ளை (சக்கோட்டையான் – கட்டிடக் கலைஞர்)

(1942 – 2020)

– கனகசபாபதி செல்வநேசன் –

படைத்தொழிலும் பயிர்த் தொழிலுமாக வாழ்ந்த எமது முன்னோர்கள் காலப்போக்கில் இடம் பெயர்ந்து அல்லது இடம்பெயர்க் கப்பட்ட சூழ்நிலையில் பாதுகாப்பான இடந்தேடி இன்று நாம் வாழுகின்ற இந்த மேட்டு நிலப்பகுதியைத் தமது வாழ்வியல் தளமாகத் தெரிவு செய்தார்கள். அவ்வாறு பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்தவர்கள் வாழ்வாதாரத் தொழிலாக பனைத் தொழிலையும் கட்டிடத் தொழிலையும் தெரிவுசெய்து பொருளாதாரத் தேவைகளை பூர்த்தி செய்து வந்தார்கள். இன்று நாம் ஒரு கல்விச் சமுதாயமாக வளர்ந்துவிட்ட நிலையில் பனைத் தொழில் செய்பவர்கள் அருகிவிட்ட நிலையிலும் கட்டிடத் தொழில் இன்றும்



நம்மவரிடையே வாழ்வாதாரத் தொழிலாகத் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. அந்தவகையில் கடந்த காலங்களில் சிறந்த கட்டிடக் கலைஞர்களாக நானறிந்த வகையில் காலஞ்சென்றவர்களான மண்டலம், நா.சி. அப்பையா, மேசன் மயிலு, செல்லக்குட்டி, பொன்னையா(கேவோலை), நாகலிங்கம், சுப்பிரமணியம்(மணியம்), இராசையா, குகதாசன், சிவதாசன் (கிளிவெட்டி), ஜெயானந்தன் (டுபாய்நாதன்), தங்கவேலாயுதம், இராசநாயகம் (சின்னண்ணை), ஆனந்தராசா இவர்களுடன் இன்றும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் பாக்கியராசா(மாலி) தணிகாசலம்(மணி) ஜெயநாதன் செல்வரத்தினம் (யோகநாதன்) அகிலேஸ்வரன், விஜயசிறி, காகேந்திரன்(சாந்தன்) போன்றவர்களைக் குறிப்பிடலாம்.(இன்றைய இளைய தலைமுறை கட்டிடத் தொழிலாளர்கள் பற்றி இன்னொரு சந்தர்ப்பத்தில் பார்க்கலாம்.) அந்தவகையில் 2020ல் காலமான முருகேசு கிருஸ்ணபிள்ளை அவர்களும் குறிப்பிடத்தக்க ஒருவராவார்.

இலங்கையின் வடக்குக் கடற்கரைக் கிராமங்களில் ஒன்றான அல்வாய் வடக்கு சக்கோட்டைக் கிராமத்தில் வாழ்ந்த முருகேசு இலட்சுமி தம்பதிகளுக்கு மூன்றாவதாகப் பிறந்த ஆண் குழந்தைக்கு கிட்டிணன் எனப் பெயரிட்டனர் சிறிது காலத்தில் அக் குழந்தை இறந்து விட்டது. அதன் பின்னர் 29.08.1942ல் நான்காவதாகப் பிறந்த ஆண்குழந்தைக்கு அக் குழந்தையின் நினைவாக கிருஸ்ணபிள்ளை எனப் பெயரிட்டனர். அவரே பின்நாளில் எல்லோராலும் சக்கோட்டையான் மற்றும் சக்கோட்டை அண்ணை என அழைக்கப்பட்டார். காலஞ்சென்ற வள்ளியம்மா, கணேசம்மா, காலஞ்சென்ற அமிர்தலிங்கம், அன்னப்பாக்கியம்(மணி) மற்றும் யோகசரஸ்வதி ஆகியோர் இவரது உடன் பிறந்தவர்களாவர். ஆரம்பக் கல்வியை சக்கோட்டை றோ.க.த.கலவன் படசாலையிலும் இடைநிலைக் கல்வியை தேவரையாளிச் சைவ வித்தியாசாலையிலும் பயின்றவர் குடும்ப பொருளாதார சூழ்நிலை காரணமாக இடைநிலைக் கல்வியுடன் படிப்பை நிறுத்தி மிக இளம் வயதில் கட்டிடவேலைக்குச் செல்லத் தொடங்கினார்.

அந்தவகையில் அல்வாய் தெற்கில் செல்லக்குட்டி மற்றும் மேசன் மயிலு போன்றவர்களுடன் கட்டிடத் தொழிலுக்குச் செல்லத் தொடங்கியவர் காலப்போக்கில் செல்லக்குட்டி அவர்களுடன் தங்கியிருந்து அவரின் பிள்ளைகளில் ஒருவராகவே வாழ்ந்து அவரிடம் கட்டிடத் தொழில் தொடர்பான நுணுக்கங்களையும் அளவுப் பிரமாணங்களையும் கற்றுத் தேர்ந்தாலும் செல்லக்குட்டி அவர்கள் இறக்கும்வரை அவருடனே தொழில் செய்து வந்தவர் அவரின் மரணத்தின்பின் மேசன் மயிலுவுடனும் நீண்டகாலம் தொழில் செய்து 70களின் பிற்பகுதியிலிருந்து தனித்து தொழில் முயற்சியில் ஈடுபட்டார். உள்ளூரில் மட்டுமன்றி முல்லைத்தீவு குமுழமுனை தண்ணீரூற்று மாங்குளம் மற்றும் மன்னார் போன்ற இடங்களிலும் ஒப்பந்த அடிப்படையிலான வேலைகளைப் பெற்று அந்தந்த இடங்களில் செல்வாக்கு மிக்கவராக வாழ்ந்து வந்தார். இக்காலப்பகுதியில் எமதூரில் பல இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கி அவர்களது வாழ்வாதாரத் தேவைகளுக்கு உதவிகள் செய்தார். அதுமட்டுமன்றி தன்னுடன் வேலை செய்தவர்கள் பலருக்குக் கட்டிடத் தொழிலின் நுணுக்கங்களையும் சொல்லிக் கொடுத்து அவர்களைத் தனித்து தொழில் செய்யும்வகையில் உருவாக்கி விட்டார்.இவரது மூன்றாவது மருமகன்(மகளின் கணவர்)த.தங்கநிதி இவரிடம் கட்டிடக் கலையை நேர்த்தியாகக் கற்றுப் பெற்ற அனுபவத்தின் பயனாக வவுனியா வளாகப் பல்கலைக் கழக கட்டிடப் பராமரிப்புப் பிரிவில் ஊழியராகத் தொழில் வாய்ப்புப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். 90களில் இடம்பெயர்ந்து புத்தளத்தில் வாழ்ந்த காலங்களிலும் தான் சார்ந்த துறையில் பலரை சிறந்த கட்டிடத் தொழிலாளராக உருவாக்கிவிட்டார். புத்தளத்தில் இவரை எல்லோரும் "பாஸ் ஐயா" அல்லது "தமிழ் ஐயா" என்றே அழைப்பார்கள்.

1962ல் அல்வாய் தெற்கு கொக்கட்டியாவளவைச் சேர்ந்த மார்க்கண்டு செல்லம்மா தம்பதிகளின் மூத்த மகள் மகாமலரைத் திருமணம் செய்து

மலர்வதனி, காலஞ்சென்ற கிருஸ்ணகுமார், மலர்விழி, பிரதீபன், மலர்மகள் மற்றும் கிருஸ்ணா ஆகியோரைப் பிள்ளைகளாகப் பெற்றார். 1987ல் இவரின் வாழ்நாள் துயரமாக அவரது மகன் கிருஸ்ணகுமாரின் மரணம் அமைகிறது. அவ்வாண்டு விடுதலைப் புலிகளிடமிருந்து வடமராட்சியை விடுவிக்கும் நோக்குடன் இலங்கை ராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட "விடுதலையாக்கும் நடவடிக்கை" எனும் பாரிய படையெடுப்பின் போது அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் அடைக்கலம் புகுந்தோர் மீது நடாத்தப்பட்ட ராணுவ எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட நூற்றுக்கணக்கான பொது மக்களில் இவரது மகனும் ஒருவராவார். அச்சமயம் இவர் தொழில் நிமித்தம் மனைவியுடன் முல்லைத்தீவில் இருந்தார். தொலைத் தொடர்புகளும் போக்குவரத்தும் சீரற்றிருந்த காலம் அது. உள்ளுணர்வின் உந்துதலால் தனது மகனுக்கு ஏதோ நடந்துவிட்டதாக உணர்ந்து முல்லைத்தீவிலிருந்து மனைவியுடன் சைக்கிளில் வந்தவர் கவிஞர் செல்லையா வீதியில் ஞானவைரவர் முடக்கில் திரும்பும்வேளை இவரது மகனின் இறுதி ஊர்வலம் பங்குவேம்படி மயானம் நோக்கித் திரும்புவது கண்டு பதறியடித்து கதறியழுத அத் தருணம் சுற்றியிருந்தவர் அனைவரையும் உருக வைத்தது. அதன் பின்னர் விடுதலைக்கான யுத்தம் தீவிரமடையவே 90களி லிருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் குடும்பத்தின ருடன் வாழ்ந்துவந்தவர் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதும் மீண்டும் ஊருக்குத் திரும்பினார்.

கிருஸ்ணபிள்ளை அவர்கள் தமிழ் இலக்கண இலக்கிய அறிவு மிக்கவர் சங்க இலக்கியப் பாடல்களை யும் கவிஞர் செல்லையாவின் பாடல்களையும் அவருடன் உரையாடும்போது உதாரணங்களுக்காகச் சொல்லிக் காட்டுவார். அது மட்டுமன்றி வாசிப்புப் பழக்கத்தை இறுதிவரை கடைப் பிடித்தவர் அவ்வப் போது நிகழும் உலக விடயங்கள் பலவற்றை நன்கு அறிந்து கொள்வதில் ஆர்வமுடையவராகவும் விளங் கினார். தினமும் பத்திரிகை வாங்கிப் படிக்கும் பழக்க முள்ளவர். அரசியலில் என்றும் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர். 1977ல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தான் சார்ந்த கட்சியின் உடுப்பிட்டித் தொகுதி வேட்பாளர் மறைந்த த.இராசலிங்கம் அவர்களின் வெற்றிக்காக முன்நின்று செயலாற்றியவர் களில் இவரும் ஒருவராவார். அந்நாளில் எமதூரில் நடை பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் அவரது துணைவியார் மங்கையற்கரசி அங்கையற்கண்ணி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயக்கொடி மற்றும் பிரச்சாரக் குழுவினர் அனைவருக்கும் இரவுநேர உணவு வழங்கித் தனது விசுவாசத்தை வெளிப்படுத்தி னார். அத்தேர்தலில் வெற்றிபெற்ற இராசலிங்கம் அவர் களை எமது கோயில் முன்றலிலிருந்து தனது தோள்களில் சுமந்தவாறு அவரது வீடுவரை சென்று தான் சார்ந்த கட்சி யின் வெற்றியினை ஆர்ப்பாட்டமாக கொண்டாடினார்.

70களின் ஆரம்பத்தில் எமதூர் ஆலடிப் பிள்ளையார் கும்பாபிசேகத்துக்கான முன்னெடுப்புகள் தீவிரமாக நடைபெற்றவேளை கோயிலின் பின்பக்க மதில் கட்டி முடிக்க போதிய கால அவகாசம் இல்லாத நிலையில் தானாகவே முன்வந்து எமதூர் இளைஞர் களின் உதவியுடன் உடனுக்குடன் கல்லறுத்து கலவை தூவி காய்ந்தும் காயாத பருவத்தில் அவற்றைக் கொண்டு ஒரே இரவில் கட்டி முடித்த இவரின் தொழில் திறமை அசாத்தியமானது. அது மட்டுமன்றி எமது மனோகரா அணியின் தீவிர ஆதரவாளராகவும் அனுசரணையாள ராகவும் விளங்கியவர் எதனையும் நேர்பட பேசக் கூடிய வர். பிறரை வைத்து வேலை வாங்கிப் பழக்கப்பட்டவர் கடைசிவரை தன் உழைப்பில் வாழ்ந்தவர் எவருடனும் சார்ந்து வாழ விரும்பாதவராக இருந்தார். மனைவியை இழந்து வாழ்ந்த காலத்திலும் முதுமையையும் பொருட் படுத்தாது மிடுக்காகவே வாழ்ந்தார்.அதனால் சில காலம் கைத்தடியையும் கைதடியையும் சார்ந்து வாழ்ந்தார். ஆயினும் முதுமையின் இயலாமையும் நோயின் தாக்கமும் தீவிரமடையவே மீண்டும் குடும்பத்தினருடன் வாழ்ந்து வந்தவேளை 09.10.2020 அன்று இயற்கை அவரைத் தன்வசம் இணைத்துக் கொண்டது.

தான் கற்ற வித்தையை அடுத்தவர்களுக்கும் சொல்லிக் கொடுத்து அவர்களை வாழ்க்கையில் முன்னேறச் செய்பவர்கள் அனைவரும் நல் ஆசான்களே. அந்த வகையில் முருகேசு கிருஸ்ணபிள்ளை அவர்களும் பலருக்குத் தொழில்சார் ஆசானாகவே வாழ்ந்து மறைந் தார் என்பது வாழ்வியல் நிதர்சனமாகும். ●





எமது ஊரின் பிரபல வைத்தியர் வேலும்மயில் கணேசவேல் அவர்களின் Suntharavel Medical & Consulting Centre 16. 09.2021 வியாழக்கிழமை காலை 11.45மணியளவில் யாழ் போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் Dr.மு.சிவராமன் அவர்களினாலும், Dr.E.சுந்தரேஸ்வரன் அவர்களினாலும் கற்பகப்பிள்ளையார் வீதி, உரும்பிராய் வடக்கு, உரும்பிராயில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. 70 வருடகால வரலாற்றைக் கொண்ட வைத்திய பரம்பரையின் புதிய அத்தியாயமாக இந்நிலையம் அமைந்துள்ளது.

நினைவுக் குறிப்பு

# விளையாட்டு ஆர்வத்தை பலரிற்கு தூண்டிய "சின்ன வெட்டை"

■ வெற்றி துஷ்யந்தன் ■



அல்வாய் மனோகரா கிராமத்தை பொறுத்தவரை அதன் பன்னெடுங்கால வரலாற்றுப் பின்னணியில் சகலதுறை சார் வல்லுநர்களை கொண்டிருக்கக் கூடிய ஒரு சிறப்புக் கிராமம் என்று அனைவரும் சொல்லி வருகின்ற ஒரு நிலை இன்றுவரை தொடர்கிறது. எமது ஊரவர்களின் ஒவ்வொரு துறைசார் வளர்ச்சியிலும் எமது கிராமத்தின் ஒவ்வொரு தடங்களும் மிக முக்கிய வகிபாகத்தை பெற்றிருக்கின்றது. கல்வியும் விளையாட்டும் எங்கள் ஊரின் மிகமுக்கியமான இரு வேறு துறைகள் என்றாலும் கல்வியினூடே விளையாட்டு என்பதுதான் எமது கிராமத்தின் மிகப்பெரிய வலிமைமிகு சூத்திரமாகும்.

இன்று வடமராட்சி பிரதேசத்திலேயே மிகப் பெரியதொரு மைதானமாக எமது அல்வாய் மனோகரா மைதானத்தை அனைவரும் வியக்கக் கூடிய வகையில் அன்றைய நாட்களில் மைதானத்தை கொள்வனவு செய்த அன்றைய முன்னவர்களை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

உண்மையில் எம் மக்கள் இடவசதியோடு எல்லாவற்றையும் அனுபவிக்கும் வகையில் ஆலயம், மைதானம் எல்லாமே எமக்கு வரப்பிரசாதமாக அமைந்தமை எங்கள் பாலகணபதியானின் சித்தமே.

பெரு விளையாட்டுக்களிற்கு எமது மனோகரா மைதானம் எவ்வளவு வலுச்சேர்த்ததோ அதற்கு இணையாக பல இளையவர்களிற்கு விளையாட்டு ஆர்வத்தை தூண்டிய சிறு மைதானங்களில் இன்றும் எம்மால் சின்ன வெட்டை என்று அழைக்கப்படுகின்ற ஆலயத்தின் முன் பக்கத்தில் அமைந்திருக்கின்ற தனியார் காணிப் பாதைக்கு ஒரு சிறப்பிருக்கின்றது. சின்னப்பாதி சந்திவரை நீளும் இந்த பிரதேசம் என்றைக்கும் எமது சிறார்களின் மைதானம் ஆகும். அதுவொரு பாதையாக இருந்தாலும் பெரு மைதானத்தில் விளையாட வேண்டும் என்ற எண்ணத்தை தந்ததில் இதற்கு பெரும் பங்குண்டு. இந்த இரண்டு மைதானங்களும் அருகருகாக இருக்கின்றமையும் இதற்கு காரணமானது.

பெரியவர்களை மாத்திரம் பெரிய மைதானத்தில் சேர்க்கின்ற ஒரு காலம் இருந்தது. இதனால் சிறுவர்கள் அநேகமாக இந்த சின்ன வெட்டையில் தான் தங்கள் மாலைப்பொழுதை கழிப்பார்கள்.

டெனிஸ் பந்தில் உதைபந்து விளையாடுதல் மிகமுக்கியமான ஒன்றாக பல காலமாக இருந்தது. காலும் காலும் அடிபடும் சத்தங்கள் செக்கனுக்கு செக்கன் கேட்டுக்கொண்டிருக்கும். சுற்றுப்போட்டிகள், அணி பிரித்து விளையாடுதல் என பலமாதிரியாக அவை அமைந்தன.

குண்டு பந்து விளையாட்டிற்கும், ஜாடி விளையாட்டிற்கும் ஏற்றதொரு இடமாகவும் இது அமைந்தது . ஜாடி விளையாட்டிற்கு அந்த வெண்மணல் தரையில் கோடுகளும், பெட்டிகளும் மிக அழகாக கீறப்பட்டு பல இளையோரின் விளையாட்டு பசிக்கு இந்த மைதானம் வலுச்சேர்த்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக எமது அல்வாய் மனோகரா முன்பள்ளியின் விளையாட்டு போட்டி பல நீண்ட ஆண்டுகளாக இந்த வெட்டையிலேயே இன்றுவரை நடைபெற்று வருகிறது. அதனால் எங்கள் ஊரின் பல மழலைப் பாதங்கள் இந்த வெட்டையிலேயே முதன்முதலாக பதிந்தது எனலாம். கயிறுழுத்தல், வலைப்பந்து, எறிபந்து, கிரிக்கெட், கிறிஸ் கம்பம் ஏறுதல், புளிச்சல் என இன்னும் பல விளையாட்டுக்கள் இந்த வெட்டையில் எம்மவர்களால் விளையாடப்பட்டிருந்தது.

வெளிக்கழகங்கள் பங்கு பற்றுகின்ற சுற்றுப்போட்டிகள் போன்றனவும் இடம்பெற்றிருக்கின்றன. விளையாட்டிற்கு அப்பால் பல இசை நிகழ்வுகள்,தெருக்கூத்துக்கள், அரசியல் ஒன்றுகூடல்கள் போராட்ட காலத்தில் திரைப்படக்காட்சிகள் என்பனவும் இங்கு நடைபெற்றன. விளையாட்டு என்று வருகின்ற போது எங்கள் பிள்ளையார் வெட்டை எந்தளவிற்கு மிக முக்கியமாக எமது கிராமத்திற்கு வலுச் சேர்த்ததோ அதைப்போலவே தான் சின்ன வெட்டையில் கால் பதியாத எவருமே இருக்க முடியாது எனும் அளவிற்கு இந்த மைதானம் முக்கிய மானது. எங்கள் கழகத்தின் பல வீரர்களை வளர்த்த எங்கள் கழக மைதானத்திற்கு அருகாக எங்கள் ஊரின் அநேகரின் கால்தடங்களை பதிந்ததனால் உண்மையில் சின்ன வெட்டை எவர் நினைவுகளிலும் தவிர்த்துவிட முடியாதது.

ஆண்கள், பெண்கள் என இருபாலரின் விளையாட்டுத்தடத்தில் இந்த சின்ன வெட்டைக்கு மாபெரும் பங்குண்டு. விளையாடிய பின் வியர்க்க வியர்க்க கிணற்றில் தண்ணி அள்ளி, வாளியில் வருகின்ற தண்ணியை கைமண்டியில் குடித்து தாகமாறும் அந்த சுகானுபவம் சொல்லி மாளாதது. இப்படியாக எங்கள் ஊரின் ஒவ்வொருவர் மத்தியிலும் விளையாட்டு உணர்வை தூண்டியதில் சின்ன வெட்டைக்கு பெரும் பங்கிருப்பது என்றைக்கும் நிதர்சனமான ஒன்றே ஆகும். ●



**அஞ்சலி**

**அமரர் திருமதி குலரத்தினம் செல்வமலர்**

**(24.06.1940 - 17.09.2021)**

அமரர் அவர்கள் அன்பும், பண்பும், சிறந்த ஆளுமையும் கொண்ட ஒரு சிறந்த பெண்மணி ஆவார். இவர் அல்வாய் வடக்கைச் சேர்ந்த வேலன் மயிலுவிற்கும் அல்வாய் தெற்கைச் சேர்ந்த முருகன் சிவக்கொழுந்துவிற்கும் செல்வமகளாக 1940.06.24 அன்று இப்பூமியில் பிறந்தார்.

இவர் குடும்பத்தின் செல்ல மகள் ஆனமையால் பெற்றோர் இவருக்கு செல்வமலர் எனப் பெயர் சூட்டினர். இவரின் உடன் பிறப்புக்களாக சோதிடர் ம.சிவகுருநாதன், அமரர் ம.சிவநாதன், திருமதி துரைராஜா திரவியலர், ம.நவநீதன், ம.திரவியராஜா ஆகியோர் உடன் பிறந்தனர். இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/வதிரிவடக்கு மெ.மி.த.க.பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை யா/தேவரையாளி இந்துக்கல்லூரியிலும் தொடர்ந்தார். குடும்பத்தில் மூத்த பிள்ளை ஆதலால் தனது பெற்றோருக்கு உதவியாக இருந்தார். தனது கல்வியை இடையிலே நிறுத்திக் கொண்டார். தனது சகோதரரின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு உழைத்தார்.

உரிய பருவம் அடைந்ததும் பெற்றோர் இவருக்கு திருமணம் செய்து வைக்க எண்ணினர். திருமணத்தின் நிமித்தமாக அக்காலத்தில் எமதூரில் செல்வச்சிறப்பு நிறைந்து விளங்கிய முருகேசு பொன்னம்மா தம்பதியரின் இளையமகன் திரு.மு.குலரத்தினம் என்பவரை திருமணம் செய்து வைத்தனர். குலரத்தினம் அவர்களின் சகோதரன் மு.நவரத்தினம் ஆவார். இவர்கள் இருவரும் ஆண்மக்கள் ஆனமையால் அன்னார் தனது கணவன் வீடான பொன்முருகன் இல்லத்தில் தங்கும் நிலை ஏற்பட்டது. கணவரின் குடும்பத்தில் பெண்மகவு இல்லையே என்ற குறையை நிவர்த்தி செய்தார். மாமன் மாமிக்கு சிறந்த மகள், மருமகள் என்ற பந்தத்தை உருவாக்கினார். தனது புகுந்த வீட்டில் சிறப்பாக தன் வாழ்க்கையை வாழ்ந்து வருகையில் இவரை நாடிவரும் உறவுகளும் பெருகி வந்தன. வீட்டிற்கு வருவோரை இன்முகத்தோடு வரவேற்று அவர்களை விருந்தோம்பச் செய்வதிலும் வல்லவராகத் திகழ்ந்தார்.

இவர்களது இல்லற வாழ்வின் பயனாக பத்மகாந்தன் குகமலர், குகச்சந்திரன், இராஜேஸ்வரன் - பொன்மதி, தர்மலிங்கம் - செல்வமதி, குகேந்திரன் ஆகியோரைப் பிள்ளைச் செல்வங்களாகப் பெற்றெடுத்தார். தன் பிள்ளைகளைக் கண்ணும் கருத்துமா வளர்ப்பது போன்று பெறாமக்கள் இருவரையும், உறவுப் பிள்ளைகளையும் அன்போடு வளர்த்து வந்தார். இதனால் அவர்கள் எல்லோராலும் நல்லம்மா, பாலம்மா, ஆசையம்மா என அன்பாக அழைக்கப்பட்டார்.

அன்னார் அவர்கள் இல்லறவாழ்வில் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வருகையில் தனது பெறாமகளான இரத்தினகுமாரிக்கு தமது சொந்த மருகனான அமரர் தம்பிமுத்து துரைராஜா (பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களை திருமணம் செய்து வைத்தனர். அதன் பின்னர் கணவருடன் கூடவே கிளிநொச்சி திருவையாறு எனும் (1979-1996) கிராமத்தில் வாழ்ந்து வந்தார். அங்கு அவர் வாழ்ந்து வருகையில் தொழிலின் நிமித்தம் கிளிநொச்சி மாவட்டத்திற்கு வரும் எமது உறவுகள் பலரையும் ஆதரித்தும் அனுசரித்தும் வந்தார். அத்தோடு 1987 ஒபரேஷன் லிபரேசன் இடப்பெயர்வின் போதும் எமது உறவுகள் பலரையும் தம்மோடு தங்க வைத்து இருப்பிடம் அளித்து உதவியும் புரிந்தார். எனினும் இவர் தனது விடாமுயற்சியால் பிள்ளைகளின் கல்விக்கும் உறுதுணையாக இருந்தார். இவரது பெரும் முயற்சியின் பயனாக இன்று பிள்ளைகள் நால்வரும் அரச உத்தியோகத்தர்களாகப் பணி புரிகின்றனர். மகன் குகச்சந்திரன் அவுஸ்திரேலியாவில் நிரந்தர பிரஜா உரிமை பெற்று வாழ்ந்து வருகின்றார்.

அமரர் அவர்கள் தனது பிள்ளைகளின் வளர்ச்சிக்குப் பொருத்தமாக நல்ல மருமக்களையும் வாழ்க்கைத் துணைகளாக்கி, அவர்களும் அரச உத்தியோகத்தில் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது. தனது பிள்ளைகள் வழிப் பேரக்குழந்தைகளையும் நன்மக்களாகக் காணவேண்டும் என்பது அன்னாரது அவா. அதன் பயனாக அன்னாரது பேரப்பிள்ளைகளும் கல்வியிலும் கேள்வியிலும் உயர்ந்து நிற்கிறார்கள். இவ்வாறு இன்புற்று வாழ்ந்து வருகையில் வயது மூப்பு காரணமாக நோய்வாய்ப்பட்டு தனது 81 வயதைப் பூர்த்தி செய்து 17.09.2021 அன்று இயற்கை மரணமெய்தி சிவன் பாதம் சென்றடைந்தார்.

- தணிகாசலம் இராஜேஸ்வரன்



**அஞ்சலி**

**அமரர் தியாகராஜா மதனபாதம்(மதன்)**

**(08.09.1980 - 02.09.2021)**

அச்சுவேலி நாவற்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட தியாகராஜா மதனபாதம் அவர்கள் திருமண பந்தம் மூலமாக அல்வாய் மனோகராவுடன் இணைந்து கொண்டார். இலங்கை போக்குவரத்து சபையின் சாரதியாக கடமையாற்றிய மதனபாதம் அவர்கள் மக்கள் மனம் கவர்ந்த சாரதியாக திகழ்ந்தார். எல்லோருடனும் அன்பாக பழகி வந்த மதனபாதம் அவர்களை "மதன்" என அன்பாக எல்லோரும் அழைத்து வந்தார்கள். "டிரக்டர்" ஒன்றையும் சொந்தமாக வைத்திருக்கும் இவர் எமது ஊரவர்கள் பலரது காணிகளை உழுது மிக நேர்த்தியாக சமப்படுத்தி கொடுப்பதிலும் உதவினார். செய்கின்ற பணியை அழகாகவும் நேர்த்தியாகவும் செய்யக்கூடியவராக விளங்கினார். உறவுகள் நட்புகளுடன் நல்ல உறவைப் பேணி வந்த இவர் கடின உழைப்பாளியாகவும் விளங்கினார். சுற்றத்தாருக்கு கஷ்டமான நெருக்கடிகளில் ஏற்படுகின்ற போது தானாக சென்று உதவிகள் பரிந்து பலரது மனங்களில் வாழ்ந்த இவர் திடீரென அகால மரணம் எய்தியது எம் ஊரவர்கள் அனைவரையும் வேதனையில் ஆழ்த்தியது. மதனபாதம் அவர்களின் இறுதி ஊர்வலத்தில் கொவிட் - 19 ஐ கூட கருத்தில் கொள்ளாது ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு அன்னாருக்கு தமது அஞ்சலிகளை தெரிவித்து கொண்டார்கள். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு குடும்பத்தாருக்கு எமது ஆறுதல்களை சொல்லிக் கொள்கின்றோம்.

- பரணீ

குறிச்சி 5

# ஆராய்ச்சியாவளவு
## (ஆரிச்சியா வளவு)

■ செல்லக்குட்டி கணேசன்

எமது முன்னோர்கள் எங்கிருந்து, எவ்வளவு ஆண்டு காலத்திற்கு முன்னர் இவ் இடங்களில் குடியேறினார்கள் என்பதற்கான சரியான தகவல்கள் எதனையும் பெற முடியாதுள்ளது. எமது முன்னோர்கள் குடியேறினார்களா அல்லது குடியேற்றப்பட்டார்களா என்ற விபரங்கள் கூட தேடலுக்குரியதாகவே உள்ளது. எமது வயதையொத்த பலர் எங்களுடைய தாய்வழி, தந்தைவழி பேரன் பேர்த்தி கூட வாழ்ந்திருக்கிறோம். அப்போது நாங்கள் சிறுவர்கள். இவ்வாறான ஆவணப்படுத்தல் சிந்தனைகள் எழவாய்ப்பு இல்லை. அக்காலத்தில் வாழ்ந்த பெரியவர்கள் தங்களுடைய முன்னோரிடம் வாய்மொழியாக கேட்டேனும் சந்ததிக்கு கடத்தியிருந்தால் "நாங்கள்" இன்னும் கூடுதலான தகவல்களைப் பெற்று ஆவணமாக்க உதவியாக இருந் திருக்கும். இருப்பினும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற முன்னோர்களைச் சந்தித்து அவர்களிடம் பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையிலும் எமக்குத் தெரிந்த வகையிலும் எமது தலைமுறையினருக்கு தெரியப்படுத்தும் நோக்கோடு "நாங்கள்" செயற்பட்டு வருகிறோம். இவ்வாறான தகவல்களைப் பதிவு செய்யும் போது அவற்றில் ஏதாவது விடுபட்டிருந்தால் அல்லது தகவல்களில் ஏதும் தவறுகள் ஏற்பட்டிருக்குமாக இருந்தால் அவற்றை சுட்டிக்காட்ட எமது வாசகர்களாகிய உங்களுக்கு பூரண உரிமை உண்டு. இக்கருத்தினை ஏற்கனவே எமது பிரதம ஆசிரிய க.பரணீதரன் அவர்கள் தனது ஆசிரியர் கண்ணோட்டத்தில் பதிவு செய்துள்ளார், என்பதையும் நினைவு படுத்திக் கொள்கிறோம்.

ஆராய்ச்சியா வளவு ஆனது நீண்ட காலமாக அல்வாய் மாதாங்கோயிலடியைச் சேர்ந்த சுப்புவள்ளி ஆச்சியின் வளவாகவே இருந்துவந்துள்ளது.

இவ் வளவானது பனை மரங்களால் நிறைந்து காணப்பட்டது. இதன் ஒரு பகுதியிலே அமரர்களான சின்னத்தம்பி பூரணம் தம்பதிகள் வாழ்ந்து வந்தார்கள். இத்தம்பதிகளின் இல்லற வாழ்வின் பயனாக மூன்று ஆண் பிள்ளைகளும் இரண்டு பெண் பிள்ளைகளும் கிடைக்கப் பெற்றனர். அவர்கள் முறையே கதிரவேல் (கொக்கட்டியா வளவு), நாகமுத்து (குமரபதி அமரர் அரசரட்ணம் அவர்களின் தாயார்), பஞ்சாட்சரம் (மதுரை, அல்வாய் வடக்கு வயல் குறிச்சி), ஜானகி அம்மா (பொன் முருகன் இல்லம், கேவோலை), தங்கராசா (கவிதா நிதி) ஆகியோராவர். மேற் குறிப்பிட்டவர் களில் நாகமுத்து, தங்கராசா ஆகிய இருவரும் தாய்க் குறிச்சியில் வாழ்ந்து வர ஏனையவர்கள் திருமண பந்தத்தால் மேற் கூறப்பட்ட குறிச்சிகளில் வாழ்ந்து வந்தார்கள்.

சின்னத்தம்பி பூரணம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி நாகமுத்து, கணபதிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகன் கந்தையா என்பவரைத் திருமணம் செய்து வாழ்ந்து வந்த காலத்தில் இரண்டு பிள்ளைகளைப் பெற்றெடுத்தார்கள். அவர்களில் ஒருவர் க.அரசரட்ணம் மற்றவர் அமரர் க.நாகராணி (குழந்தை மரணம்) கந்தையா இளவயதிலேயே மனைவியை இழந்ததனால், பெரியோயர்களின் வேண்டுதலின்படி சின்னத் தம்பி பொன்னாச்சி தம்பதிகளின் புதல்வன் அப்பையா (ஆராய்ச்சியாவளவு கொக்கட்டியாவளவு) மகள் குணவதியை மறுமணம் செய்து அவ்விடத்திலேயே வாழ்ந்து வந்தார். இவர்களின் இல்லற வாழ்வின் பயனாக செல்வராணி, செபரத்தினம்(சின்னராசா சிலாவத்தை), குணரத்தினம் (தயா), அரியரத்தினம்(முத்து, போரில் காணாமல் போனவர்), உதயரத்தினம்(அமரர்), கமலரத்தினம்(அ.வடக்கு வயல்), விசயரத்தினம்(முள்ளியவளை), கந்தவேள்(அரியாலை) ஆகியோரை பிள்ளைச் செல்வங்களாகப் பெற்றெடுத்தனர்.

இக் குறிச்சியானது கவிஞர் செல்லையா வீதியில் அமரர் சைவம் சிவகுரு ஆசிரியரின் வீட்டின் கிழக்குப்புற எல்லைக்கும் மங்களப்பாதி குறிச்சியின் மேற்குப்புற எல்லைக்குமிடையே நேர்வடக்காக சுமார் 150 மீற்றர் தொலைவில் உள்ளது. இவ் இரண்டு எல்லைக்கும் இடைப்பட்ட நீள் சதுர வடிவமான நிலப்பரப்பானது இக் குறிச்சிக்கான போக்குவரத்துப் பாதையாக இருந்து வந்தாலும், அப்பாதையானது தனிப்பட்ட ஒருவரின் நிலாகும்.

இன்று இக் குறிச்சியானது கைமாறிப் போனாலும் இங்கு வாழ்ந்த முன்னோர்களின் அடையாளமாக அமரர் க.அரச ரட்ணம் அவர்களின் மகள் திருமதி ஜெயவதி வரதவேல் குடும்பத்தினரும், அமரர்களான கந்தையா குணவதி தம்பதிகளின் மகன் குணரத்தினம் குடும்பத்தினரும் வாழ்ந்து வருகின்றனர். சின்னத்தம்பி பூரணம் தம்பதிகளின் இளைய மகன் தங்கராசா இக்குறிச்சியில் இருந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் வீடு கட்டி (கவிதாநிதி) குடும்பத்தினருடன் வாழ்ந்து வருகிறார்.

எமது கிராமத்தில் முதன் முதலில் வானொலி (றேடியோ) யை பன்படுத்தியவர் அமரரான கந்தையா குடும்பத்தினரே ஆவர். இது இக் குறிச்சியின் சிறப்பான அடையாளமாக பலராலும் இன்று வரை சிறப்பாக பேசப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க தாகும். ●

**திருத்தம்**

சென்ற இதழில் செல்லக்குட்டி கணேசனால் எழுதப்பட்ட அமரர் சி.மதியழகன் பற்றிய அஞ்சலிக்குறிப்பில் "காசிநாதர் பறுபதம் தம்பதிகளின் ஏக புதல்வி **இராஜேஸ்வரி(மாம்பழம்)**" எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. **"ஜெகதீஸ்வரி"(மாம்பழம்)** என்பதே சரியானது. வாசகர் களுக்கு ஏற்பட்ட குழப்பத்துக்கு வருந்துகிறோம்.

# அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் ஆரம்பகல உபயகாரர்கள் ( 13.01.1950 அறிக்கைப் பிரகாரம்)

**1 ஆம் திருவிழா**

நா.ஆறுமுகம்
நா.கந்தையா
நா.கிருஷ்ணபிள்ளை
பொ.செல்லையா
கோ.சச்சிதானந்தம்
ஏ.செல்லையா
மு.இராசா
நீ.சுப்பர்
க.முருகேசு
வே.விசயலிங்கம்
மூ.மு.மயிலு
ஆ.பொன்னையா
நீ.இராசம்
ஏ.முருகேசு
வே.மயிலு

**2 ஆம் திருவிழா**

ச.செல்லப்பா
ச.குழந்தை
க.நற்குணம்
தி.விருத்தாசலம்
மு.கனகசிங்கம்
ஐ.செல்வத்துரை
வ.மயிலு
க.மார்க்கண்டு

**3 ஆம் திருவிழா**

க.கந்தையா
கா.கதிர்காமு
கா.சுந்தரம்
ச.தியாகு
ச.சிவகுரு
ச.தம்பிஜயா
க.வேலுப்பிள்ளை
க.தம்பித்துரை
வே.கணவதிப்பிள்ளை
ஆ.தாமு
நா.வேலுப்பிள்ளை

**4 ஆம் திருவிழா**

மு.வைத்திலிங்கம்
மு.செல்லையா
மு.பொன்னையா
சு.சீவரத்தினம்
மு.வீரகத்தி
மு.தம்பு
மு.சி.அப்பையா
த. மாணிக்கம்

**5 ஆம் திருவிழா**

பெ.சபாபதி
வ.மு.மயிலு
நா.சி. அப்பையா
சி.கந்தவனம்
வே.சண்முகம்
மூ.க.வல்லிபுரம்
செ.கோணாமலை
மா.சின்னத்தம்பி
மு.கந்தையா

**6 ஆம் திருவிழா**

க.பொன்னையா
க.இராசசிங்கம்
க.இராசம்
கா.சடையர்
இ.செல்லத்துரை
பொ.தங்கத்துரை

**7 ஆம் திருவிழா**

சி.க.பொன்னையா
க.சீனித்தம்பி
க.கிருஷ்ணபிள்ளை
சீ.சரவணை
வே.சீனிமுத்து
ப. சபாரத்தினம்
சி.கந்தையா
நா.க. கந்தையா
க.செல்லையா
ஆ.கணபதிப்பிள்ளை
மு.சி. கதிரவேல்
க.கந்தவனம்
ச.கிருஷ்ணபிள்ளை
சி.நடேசு
க.மார்க்கண்டு
ஆ.கதிரவேல்

**8 ஆம் திருவிழா**

க.மகேசு
க.இரத்தினம்
த.செல்வராசா
க.வல்லிபுரம்
த.கனகசபை
வ.சுப்பிரமணியம்
மு.ஆறுமுகம்
க.பரஞ்சோதி
சி.தம்பு
வே.தம்பிராசா

**9 ஆம் திருவிழா**

க.முருகேசு
க.கணபதிப்பிள்ளை
க. கதிர்காமு
வ. கணபதிப்பிள்ளை
வ.பொன்னையா
வ.செல்லக்குட்டி
ச.நாகலிங்கம்
வே.தம்பிமுத்து
அ.மு.தம்பு
மு. நவரத்தினம்

**10 ஆம் திருவிழா**

ச.வெற்றியர்
ச.மாணிக்கம்
வே.பாலசிங்கம்
இ.சவலை ஐயா
க.நமசிவாயம்
மூ.நாகமுத்து
மூ.பொன்னையா
செ.நடேசு
செ.சீனித்தம்பி

- தகவல் : கலாநிதி த. கலாமணி

## எல்லாம் “ட்டு”

அம்மா அவிப்பது பிட்டு
ஆசிரியர் தருவது குட்டு
இதமான பணியாரம் லட்டு
ஈழத்தை இந்தியாவுடன் ஒட்டு
உயர்ந்தோர் அணிவது பட்டு
ஊராருக்கு உபதேசம் ஊட்டு
எல்லோரும் விரும்புவது பாட்டு
ஏட்டில் இருப்பது நாட்டு
ஐந்தும் மூன்றும் எட்டு
ஒன்றும் அரையும் துட்டு
முற்றம் நித்தம் கூட்டு
பிணைத்து வைப்பது பூட்டு
காயம் பட்டாற் கட்டு
துப்பாக்கி தீர்வது வேட்டு
பொருள்கள் வைப்பது தட்டு.

- வே.த.சண்முகவேல்

## பாலர் எமது வகுப்பறை

நாங்கள் படிக்கும் வகுப்பறை
நல்ல தொரு வகுப்பறை
பாலர் நாமும் விரும்பியே
பாடம் படிக்கம் வகுப்பறை

சின்னச் சின்ன மேசைகள்
சிறிய நல்ல கதிரைகள்
வண்ணமாக அடுக்கியே
வைத்தி ருக்கும் வகுப்பறை

பேனா பென்சில் புத்தகம்
பெரிய கரும்பலகையும்
தண்ணீர்ப் போத்தல் சாப்பாடும்
தாங்கி யுள்ள வகுப்பறை

சின்ன உருவம் செய்திட
சிறந்த படங்கள் வரைந்திட
எண்ணம் போல விளையாட
ஏற்ற பொருட்கள் இருந்திடும்

சுற்றி வரப் படங்களும்
சுவரில் காட்சி அளித்திடும்
கற்று நாங்கள் மகிழ்ந்திட
கண்ணுக்கழகு தந்திடும்

பாடம் சொல்லும் ரீச்சரும்
படிக்கும் சிறிய பாலரும்
கூடி ஒன்றாய் இருந்திடும்
குதூகலமான வகுப்பறை

- செல்வரூபி இரத்தினசிங்கம்

## அடிமைப்பாலம்

வெளிச்சம் போதித்த போதும்
ஒளி வரவில்லையே
மக்களின் தன்மையும் பிடிக்கின்ற
பிணியும் கொடூரமும்
மக்களின் தன்மையைச் சேருகின்ற
அடிமை என்கிற ஒரு கொடூரப் போலியே
செல்லுகின்ற போதெல்லாம் தவறுவதை
ஏன் ஆராயக்கூடாது? இதனை
எதற்காக ஆராயக்கூடாது?
ஏன் பணிந்தாய்? எதற்காகப் பணிகின்றாய்
என்பது புரியவில்லையே ஐயா!
சொல்வதைக்கேள் அடிமையாக அல்ல
குருதிக் கொதிப்புடைய மனிதனாய்க்கேள்
பாலம் போன்ற வாழ்விலே மாக்களே
மக்களைவிட சிறந்தது என புரிகிறது.
மானிட வாழ்வில் அடிமைப் பாலம்
ஒரு வாழ்க்கைப் பாதையாகி விட்டது.
இவற்றை மாற்ற வேண்டும்!
மாற்றியமைக்க வேண்டும்

- வெற்றிவேல் சிந்துஜன்

## ஆலடியான்

ஐங்கரம் கொண்டவர்
பார்வதி மைந்தனே
ஆலடி பதி அமர்ந்த
பால கணபதியே

பெற்றோரை உலகமாக
கொண்ட பெருமானே
ஆனைமுகம் கொள்பவரே
ஆறுகனின் சகோதரனே

தும்பிக்கையால் துதிதீர்க்கும்
ஆலடி ஐங்கரனே
யோகர் சுவாமி சீடர்களும்
வந்து வழிபட்ட கணநாதா

அல்வையூர் மக்களது
விக்னங்களை தீர்த்து வைக்கும்
ஆலடி கணபதிக்கு
போற்றி... போற்றி...

- சாந்தமூர்த்தி கோகுலன்

## உலகம் போற்ற வாழ்ந்திடுவோம்

இருபத்தோராம் நூற்றாண்டின்
ஈடு இணையற்ற வளர்ச்சியாலும்
பாவிகளாம் மானிடர்கள்
பற்பல பிரச்சனையால்
பலிகடா வாகின்றனர்
இன மத மொழி சாதி பேதம் மறந்து
இலங்கை மக்கள் நாமென்றும்
இறைவன் பிள்ளையாய் வாழ்ந்திருந்து
புதுப்புது விந்தைகள் பல புரிந்து
பூமித்தாயின் நற்பிள்ளையாய்
நாடு சிறக்க பாடிடுவோம்
உலகம் போற்ற வாழ்ந்திடுவோம்...

- சு.சுபாங்கன்

## சமாதானம்

நஞ்சைக்கு புஞ்சைக்கு
மழை சமாதானம்

கிழக்கிற்கு மேற்கிற்கு
சூரியன் சமாதானம்

இறப்பிற்கு
பிறப்பு சமாதானம்

அழகுக்கு
உவமை சமாதானம்

எனக்கு நீ சமாதானம்

பிரிவுக்கு
கூடல் சமாதானம்

மென்மைக்கு
பூ சமாதானம்

இனிமைக்கு
குயில் சமாதானம்

முற்றுப் புள்ளிக்கு
தொடரிலி சமாதானம்

அன்புக்கு
உலகம் சமாதானம்.

- ஜெ.உமாசுதன்

## தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

கட்டுத்தறியும் கவிபாடிடும்
கம்பன் கொண்ட தேன்மொழியே
யாதுமூரே யாவரும் கேளிர் என
யாத்த மொழியே தமிழ் மொழியே

கருவில் சுமந்து கற்பகம் சொரிந்து
கனவில் வளர்க்கும் தாய் உயிரன்றோ
பிறப்பில் கலந்து உயிர்த்தெழுந்து
புவியில் உயர்த்தும் தமிழ் உரித்தன்றோ

கலைகள் பலவும் தன்னகம் கொண்டு
கவிகள் படைக்கும் காவியம் இதுவே
அறங்கள் யாவும் ஊடே புகுந்து
அழகாய் உதிக்கும் நம் மொழி தமிழே

ஆயிரம் வலிகள் சுமந்து நின்றாலும்
ஆகமம் கூறும் நெறியில் நின்றிடுவோம்
துரோகம் வாழும் குகையில் இருந்தாலும்
துயரின்றி வீரச்சாவு காத்திடுவோம்

அரக்க நெறியில் விதிகள் உடைத்து
அடக்க நினைக்கும் வன்மமே கேள்
தனித்த உதித்து உலகம் போற்றும்
தமிழது எங்கள் உயிருக்கு நேர்...

- வி.கிருசிகேசன்